மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.87/2017

வாக்குமூலம். வா.சா. 6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ் கிராம நிர்வாக அலுவலர் | | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | தொழில் | மேல்மங்கலம் கிராம நிர்வாக அலுவலர் |
| தாலுகா | | வயது | |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 11.11.2021 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

மேல்மங்கலம் கிராம புல எண் 101/3 ன் பழைய புல எண் 101/3 தான் செட்டில்மெண்ட் கணக்கு இல்லை. அதன் விஸ்தீர்ணம் 23 ஏர்ஸ். புல எண் 101/3 அறந்தாங்கி கட்டுமாவடி ரோட்டில் தெற்கில் உள்ளது என்றால் சரிதான். கருங்குளி கிராம எல்லைக்கு வடக்கே உள்ளது. புல எண் 101/3 கிழக்கே 2 சர்வே எண்கள் 101/1, பாசபீவி, 101/2 கிருஷ்ணமூர்த்தி வகையறா பெயரில் உள்ளது. மேற்கே 101/4 ஜெயபிரகாசம் பெயரில் உள்ளது. கிழக்கு மேற்கில் தண்டாயுதபாணி கோவில் புஞ்சையாக ஏற்கனவே உள்ளது என்றால் எனக்கு தெரியாது. கருங்குளி கிராம எல்லையின் சர்வே எண் 332/7 சண்முகம் பெயரில் உள்ளது.

பிரதிவாதி தரப்பில் ஏற்கனவே ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளது.